# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1986 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, சருவதேச சிங்கக் களரிகள் மாவட்டம் 306 ஏ — தேசிய அபிவிருத்தித் தாபன நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*[1986, செப்ரெம்பர் மாதம் 05 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1986. செப்ரெம்பர் மாதம் 05 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60 தபாற் செலவு : சதம் 75

## 1986 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, சருவதேச சிங்கக் களரிகள் மாவட்டம் 306 ஏ—தேசிய அபிவிருத்தித் தாபன நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்

[1986 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 5 தேதியன்று அத்தாட்சிப்படுத்தப் பட்டது.]

**ச. வ. ஒ—61/85**

**சருவதேச சிங்கக் களரிகள் மாவட்டம் 306 ஏ—தேசிய அபிவிருத்தித் தாபன நம்பிக்கைப்பொறுப்பைத் தாபிப்பதற்கும் கூட்டிணைப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்.**

பின்தங்கிய கிராமங்களை அபிவிருத்தி செய்தலும் வீடுகளைக் கட்டியமைத்தலும் புனர்கட்டுதலும் " சருவதேச சிங்கக் களரிகள் மாவட்டம் 306 ஏ இலங்கை " என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகத்தின் குறிக்கோள்களுள் அடங்கியுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட சருவதேச சிங்கக் களரிகள் மாவட்டம் 306ஏ—இலங்கை என்பதன் மூலம் பின்தங்கிய கிராமங்களை அபிவிருத்தி செய்தலும் வீடுகளைக் கட்டியமைத்தலும் புனர்கட்டுதலும் என்னும் சொல்லப்பட்ட குறிக்கோள்களை இன்னும் பயனுறும்வகையில் நிறைவேற்றுவதற்கென " சருவதேச சிங்கக் களரிகள் மாவட்டம் 306 ஏ—தேசிய அபிவிருத்தித் தாபன நம்பிக்கைப்பொறுப்பு " என அழைக்கப்படவேண்டிய கழகமொன்று தாபிக்கப்படுதல் உசிதமானதெனக் கருதப்படுகின்றதாதலாலும்.

அத்துடன் சொல்லப்பட்ட கழகமானது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1986 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, சருவதேச சிங்கக் களரிகள் மாவட்டம் 306ஏ—தேசிய அபிவிருத்தித் தாபன நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (1) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் " நம்பிக்கைப்பொறுப்பு " எனக் குறிப்பீடு செய்யப்படும்) " சருவதேச சிங்கக் களரிகள் மாவட்டம் 306 ஏ—தேசிய அபிவிருத்தித் தாபன நம்பிக்கைப்பொறுப்பு " என அழைக்கப்படவேண்டிய நம்பிக்கைப்பொறுப்பு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும். சருவதேச சிங்கக் களரிகள் மாவட்டம் 306 ஏ—தேசிய அபிவிருத்தித் தாபன நம்பிக்கைப் பொறுப்பைத் தாபித்தலும் கூட்டிணைத்தலும்.

(2) நம்பிக்கைப்பொறுப்பு, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயர்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் உடையதாதலும் வேண்டும். அத்துடன் அது அத்தகைய பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

3. (1) நம்பிக்கைப்பொறுப்பின் நிருவாகமும் முகாமையும் கட்டுப்பாடும் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அமைக்கப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையொன்றுக்குரித்தாக்கப்படுதல் வேண்டும். நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.

(3) (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பிடு செய்யப்படும்) நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) சபையின் தவிசாளராக இருக்கவேண்டிய சருவதேச சிங்கக் களரிகள் மாவட்டம் 306 ஏ—இலங்கை (இது இதனகத்துப் பின்னர் "மாவட்டம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) என்பதன் மாவட்ட ஆளுநர் ;

(ஆ) மாவட்டத்தின் கிட்டிய கடந்த கால மாவட்ட ஆளுநர் ;

(இ) மாவட்டத்தின் அமைச்சரவைச் செயலாளர் ;

(ஈ) மாவட்டத்தின் அமைச்சரவைப் பொருளாளர் ;

(உ) மாவட்டத்தின் மாவட்ட ஆளுநரால் நியமிக்கப்பட வேண்டிய மாவட்டத்திலுள்ள சிங்கக் களரிகளிலிருந்து நான்கு உறுப்பினர்கள் ; அத்துடன்

(ஊ) மாவட்டத்தின் மாவட்ட அமைச்சரவையின் விதப்புரையின்மீது மாவட்டத்தின் மாவட்ட ஆளுநரால் நியமிக்கப்பட வேண்டிய மாவட்டத்திலுள்ள சிங்கக் களரிகளிலிருந்து நான்கு உறுப்பினர்கள்.

நம்பிக்கைப் பொறுப்பின் குறிக்கோள்கள்.

4. நம்பிக்கைப்பொறுப்பு தாபிக்கப்படுவதற்கான குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(i) பின்தங்கிய கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்காக வசதிகளையும் உதவிகளையும் ஏற்பாடு செய்தல் ;

(ii) வீடுகளைக் கட்டியமைப்பதற்காகவும் புனர்கட்டுவதற்கும் வசதிகளையும் உதவிகளையும் ஏற்பாடு செய்தல் ;

(iii) சமூகசேவைகள் திணைக்களத்துடன் பதிவு செய்யப்பட்ட சிங்கக் களரிகளுக்கும் நாட்டின் தேசிய அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட கருத்திட்டங்களைப் பொறுப்பேற்கும் சமூக சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஒழுங்கமைப்புகளுக்கும் பண வசதியும் வேறு உதவிகளையும் ஏற்பாடு செய்தல் ; அத்துடன்

(iv) சமூகசேவைகள் திணைக்களம் அறிந்த மனக்குறைபாடுற்றவர்களுக்கு அல்லது உடல் குறைபாடுற்றவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்காக பண வசதிகளையும் வேறு உதவிகளையும் ஏற்பாடுசெய்தல்.

நம்பிக்கைப் பொறுப்பின் தத்துவங்கள்.

5. சபையானது, நம்பிக்கைப்பொறுப்பின் பெயரில் பின்வருவனவற்றைச் செய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும் :—

(அ) உண்ணாட்டு வளங்களிலிருந்தேனும் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் அங்கிகாரத்துடன் வெளிநாட்டு வளங்களிலிருந்தேனும் காசாகவோ பொருளாகவோ மானியக்கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெற்றுக் கொள்ளுதல் ;

(ஆ) ஏதேனும் அசைவுள்ள, அல்லது அசைவற்ற ஆதனத்தை எத்தகைய எம்முறையிலேனும் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது விடுதல், ஈடுவைத்தல், அடகு வைத்தல், விற்றல் அல்லது வேறுவகையில் கையுதிர்த்தல் .

(இ) சமூக சேவைகள் திணைக்களத்தின் அங்கிகாரத்துடன் நம்பிக்கைப்பொறுப்பின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்காக மானியக்கொடைகளையும் அறக்கொடைகளை அல்லது கடன்களையும் அளித்தல்,

(ஈ) அதன் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும் வேலைக்கமர்த்தலும் அவர்களுக்கு ஊதியமளித்தலும் அவர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டினைப் பிரயோகித்தலும் ;

(உ) வங்கிக் கணக்குகளைத் தொடக்கிவைத்தலும், நடைமுறைப்படுத்தலும், மூடுதலும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாமல் கடன் எடுத்தலும் அல்லது கடன் திரட்டுதலும் ;

(ஊ) நம்பிக்கைப்பொறுப்புக்குச் சொந்தமான நிதிகளை, நம்பிக்கைப் பொறுப்புப் பணங்களை முதலீடு செய்வதற்குச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டவாறான அத்தகைய எவையேனும் முதலீடுகளில் சபையின் தற்றுணிபின்பேரில் முதலீடு செய்தலும், அத்தகைய முதலீடுகளைச் சபையின் தற்றுணிபின்பேரில் மீளழைத்தலும், மீள முதலீடுசெய்தலும், வேறுபடுத்தலும் அத்தகைய முதலீடுகளிருந்து திரளும் வருமானத்தைச் சேகரித்தலும் ; அத்துடன்

(எ) நம்பிக்கைப்பொறுப்பால் பொறுப்பேற்கப்படும் கருத்திட்டங்களுக்கு நிதியளிக்கும் நோக்கத்துக்காக உள்ளூரிலும் வெளிநாட்டு முகவாண்மைகள் மூலமாகவும் நிதிகளைத் திரட்டுதல் ;

விதிகளை ஆக்குவதற்கு சபைக்குள்ள தத்துவம்.

6. (1) பொதுக்கூட்டமொன்றிலும் அதில் சமூகமளித்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் வாக்குப் பெரும்பான்மைகொண்டும், பின்வரும் எல்லாக் கருமங்களுக்கும் அல்லது அவற்றுள் எதற்கும் இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் சபைக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :—

(அ) சபையின் பதவிக்காலம், பதவிவிலகல் அல்லது பதவி வறிதாக்கல், பதவி வெற்றிடங்களை நிரப்புதல் ;

அத்துடன்,

(ஆ) நம்பிக்கைப்பொறுப்பின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் சேவை நியதி, நிபந்தனைகள் உட்பட அவர்களின் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும், பணிகளும் ;

(இ) சபையின் கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையும் கூட்டங்களைக் கூட்டுதலும் நடாத்துதலும் அத்தகைய கூட்டங்களுக்கான நேரங்களும் இடங்களும், அறிவித்தலும் நிகழ்ச்சி நிரலும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும், அவற்றில் அலுவல்களை நடாத்துதலும் ;

(ஈ) நம்பிக்கைப்பொறுப்பின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும் அதனது நிதிகளின் கட்டுக்காப்பும் அதன் கணக்குகளைப் பேணிவருதலும் கணக்காய்வு செய்தலும் ; அத்துடன்

(உ) பொதுவில் நம்பிக்கைப்பொறுப்பின் அலுவல்களை முகாமைசெய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) சபையினால் ஆக்கப்பட்ட விதி எதுவும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படுகின்ற அதே முறையில் திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

நம்பிக்கைப் பொறுப்பின் இலச்சினை.

7. நம்பிக்கைப்பொறுப்பின் இலச்சினையானது—

(அ) சபை காலத்திற்குக் காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம் ; அத்துடன்

(இ) சபையின் அனுமதியுடனும் ஆகக்குறைந்தது சபையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலும் அன்றி எந்தச் சாதனத்திலும் அல்லது ஆவணத்திலும் இடப்படுதலாகாது. அவர்கள் தாம் சமூகமாயிருந்ததற்கத் தாட்சியாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும். அத்துடன் அவ்வாறு கையொப்பமிடுதல், சாட்சிக்காரரொருவராக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

குடியரசினதும் மற்றும் பேரினதும் உரிமைகளைப் பேணல்.

8. இச்சட்டத்திலடங்கியுள்ள எதுவும், குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்களின்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.